(உ) மேட்டூர் அணையிலிருந்து கடைமடைப் பகுதிகளுக்குப் போதுமான நீர் கிடைக்கச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மேட்டூர் அணையில் தண்ணீர் திறந்துவிட்டிருக்கிறார்கள். அரசு அறிவிக்கும்போது அங்கே 29 அடிதான் தண்ணீர் இருந்தது. இது மிக தைரியமான அறிவிப்பு. அப்படிப்பட்ட அறிவிப்பாக இருந்தாலும், இன்று தண்ணீர் ஓரளவுக்கு திருப்தி தருகிற வகையில் மேட்டூர் அணையில் இருக்கிறது. ஆனால் இந்தத் தண்ணீர் இருப்புப் போதாது. இதேபோலத்தான் சென்ற ஆண்டும் இருந்தது. கடைசியில் மிகவும் மோசமான நிலை ஏற்பட்டு, பற்றாக்குறை ஏற்பட்டு, கடைமடைப் பகுதிகளுக்குத் தண்ணீர்ப் போய்ச் சேரவில்லை. கடைமடைப் பகுதிக்குப் போய்ச் சேராததால் 100-க்கு 100 விவசாயிகள் கடந்த ஆண்டு விவசாயம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. மிகவும் கஷ்டமான நிலையில் இருக்கிறார்கள். வசதி படைத்த சில பெரியவர்கள் பொதுப் பணித்துறை சிப்பந்திகளிடம் இருந்து தண்ணீரை விலைக்கு வாங்குகிறார்கள். இவர்களும், விலைக்கு விற்கிறார்கள். இந் நிகழ்ச்சியால் கடைமடைப் பகுதிகளில் வருடா வருடம் விவசாயம் முழுமையாகப் பாதிக்கப்படுகிறது. ஆகவே, மேலும் நாம் கர்நாடக அரசிடம் தண்ணீர் பெற்று, 'ஷிப்ட்' இல்லாமல் அதாவது முறை வைக்காமல் தண்ணீர் விட அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, 'டர்ன் சிஸ்டம்' வைப்பதே தண்ணீரை சிக்கனப்படுத்துவதற்காகத்தான். இவ்வளவு 'டர்ன் சிஸ்டம்' வைத்த பிறகும், சென்ற ஆண்டு இறுதியில் எப்படிப்பட்ட நிலைமையை அனுபவிக்கவேண்டி வந்தது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆகையினால்தான் அந்த 'டர்ன் சிஸ்டம்' வைத்து சிக்கனமாகத் தண்ணீரைப் பயன்படுத்தவேண்டுமென்று முறையாக மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இரண்டாவதாக ஒன்றைச் சொன்னார்கள். யாரோ பொதுப் பணித்துறை ஊழியர்கள் விற்கிறார்கள், வாங்குகிறார்கள் என்று. இப்படி பொத்தாம் பொதுவாக அப்படிப்பட்ட குற்றச்சாட்டைச் சொல்லக்கூடாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களே நெஞ்சிலே கைவைத்துச் சொல்லட்டும். சென்ற ஆண்டு பொதுப்பணித் துறையினர் இரவு பகலாக எவ்வளவு பாடுபட்டு, கடைசி நாள் வரையில் தஞ்சை மாவட்டத்தில் நெல் பயிரைக் காப்பாற்றினார்கள் என்பதை உணர்ந்து அவர் நன்றி சொல்வார் என்று எதிர்பார்த்தேன். ஆனால் பழியைத் தூக்கிப் போட்டிருக்கிறார்கள். இருந்தாலும் இந்த ஆண்டு 'டர்ன் சிஸ்டம்' இருக்கக்கூடாது என்று அவர் சொல்கிறார். இவர் உறுப்பினராக இருக்கிற காரணத்தால் இங்கே எழுந்து கேட்டு

1990 ஆகஸ்ட் 23] [திரு. துரைமுருகன்]

விட்டார். ஆனால் பக்கத்திலே உட்கார்ந்திருக்கிற நம்முடைய உள்ளாட்சித்துறை அமைச்சர் அண்ணன் மாண்புமிகு மணி அவர்கள் என்னை இரண்டு நாட்களாக 'பிரையின் வாஷே' செய்து கொண்டிருக்கிறார். காரணம் கடைமடைப் பகுதிக்கு தண்ணீர்ப் போய்ச் சேரவேண்டுமென்பதாலே. ஆனால் எல்லா நேரத்திலும் 'டர்ன் சிஸ்டம்' என்பதை முழுக்க எடுத்துவிட முடியாது. இன்றைக்கு இருக்கிற நிலைமை, நேற்றைய தண்ணீர் வரத்தை விட குறைந்திருக்கிறது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் மணி அவர்களும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஒன்றைச் செய்யலாம்.

எல்லா ஆறுகளிலும் கடைமடைப் பகுதிக்குத் தண்ணீர்ப் போய்ச் சேருகிற வரையில்—சேடை நாற்று என்பார்கள்—அதுவரையில் வேண்டுமானால் 'டர்ன் சிஸ்டத்'தைக் கொஞ்சம் ஒத்தி வைக்கலாம். அதற்கே என்ன ஆகுமென்றால், 1 டி.எம்.சி. எடுக்கிறவர்கள், ஒன்றேகால் டி.எம்.சி. எடுக்கவேண்டும். 18,000 கியூசெக்சுக்குப் போகவேண்டும், உறுப்பினர் சொன்னாரே ரொம்ப தைரியம் என்று, அந்த தைரியத்தின் அடிப்படையில்தான் இந்த மன்றத்திலே இதை அறிவிக்கிறேன். எல்லா ஆறுகளிலும் கடைமடைப் பகுதிக்குத் தண்ணீர்ப் போய்ச் சேருகிற வரையில், 'டர்ன் சிஸ்டம்' இருக்காது. போய்ச் சேர்ந்த மறுநிமிடமே 'டர்ன் சிஸ்டம்' அமல்படுத்தப்படும்.

10-45 மணி

4. விதி 110-இன்கீழ் செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் 110-வது விதியின்கீழ் ஓர் அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1948 ஆம் ஆண்டு குறைந்தபட்ச ஊதிய சட்டத்தின்கீழ் தீப்பெட்டி மற்றும் பட்டாசு தயாரிக்கும் தொழிலாளர்களுக்குக் குறைந்த அளவு ஊதியம் மறு நிர்ணயம் செய்வது குறித்து மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. வரதராசன் மற்றும் திருமதி பாப்பா உமாநாத் அவர்கள் ஒரு கவன ஈர்ப்பு தீர்மானம் கொடுத்திருந்தனர். அதற்குப் பதில் அளிக்கும் வகையில் 2—5—1990 அன்று இப்பேரவை முன் அறிக்கை ஒன்றை வைத்தேன். அதைத் தொடர்ந்து நடந்த விவாதத்தின்போது குறைந்த அளவு ஊதியத்தை நிர்ணயிக்க இரண்டு முறைகள் உள்ளன என்றும், ஆலோசனைக் குழு ஒன்றை அமைத்து, அக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் ஊதிய விகிதத்தை திருத்தியமைப்பது என்பது ஒரு முறை. திருத்தியமைக்கப்பட இருக்கும் ஊதிய விகிதங்களைக் குறித்து